## பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு பற்றிய நவம்பர் (2015) மாதத்திற்கான முன்னறிவுப்பு

தமிழ்நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் தற்போது நிலவும் பருவநிலை மாற்றம், வட கிழக்கு பருவமழை மற்றும் பனிமுட்டத்துடன் மழை பெய்து வருவது ஒரு சில பூச்சி மற்றும் நோய்கள் நெற்பயிரை தாக்கி சேதம் விளைவிக்கும் வாய்ப்புகள் உள்ளது. இதனை கருத்தில் கொண்டு நெல் விவசாயிகளுக்காக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், பயிர் பாதுகாப்பு இயக்ககம் இந்த சிறப்பு முன்னறிவிப்பை வெளியிட்டு நெற் பயிரை பூச்சி மற்றும் நோய்களிலிருந்து பாதுகாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

### பூச்சி மேலாண்மை

### இலை சுருட்டுப்புழு

தற்போது நிலவும் தொடர் மழை மற்றும் பனி மூட்டமான சூழ்நிலை காரணமாக நெல்லில் இலை சுருட்டுப்புழு தாக்குதலுக்கு வாய்ப்புள்ளது. இளம் பயிர்கள், தூர் பிடிக்கும் பருவத்தில் உள்ள பயிர்களை தாக்கும் இந்த புழுக்கள் இலைகளை உள்பக்கமாக சுருட்டி உள்ளிருந்து பச்சையத்தை சுரண்டி உண்கின்றன. இதனால் இலைகள் வெள்ளை நிற சுரண்டல்களுடன் காணப்படும். தாக்குதல் அதிகமானால் செடிகள் காய்ந்து விடும். இப்பூச்சியின் தாக்குதல் இருக்கும் சமயம் தழைச்சத்து உரங்களை வயலில் இடுவதை குறைக்க வேண்டும். வயலில் இப்புழுவின் அந்தி பூச்சிகளின் நடமாட்டத்தை அறிந்து விளக்கு பொறி வைத்து கவர்ந்து அழிக்கலாம். தாவர பூச்சிக்கொல்லியான அசாடிரக்டீன் 0.03 சதக் கரைசலை எக்டருக்கு 400 மி.லி / ஏக்கர் தெளிக்கலாம். இரசாயன பூச்சிக்கொல்லிகளான கார்டஃப் 50 சத பவுடர் 400 கிராம் / ஏக்கர் (அல்லது) குளோர்பைரிபால் 20 EC 500 மி.லி / ஏக்கர் மருந்தை ஒரு எக்டருக்கு என்ற அளவில் உபயோகித்து கட்டுப்படுத்தலாம்.

### புகையான்

நெல் வயலில் அதிகமாக நீர் தேங்கி வெளியேற்ற முடியமால் உள்ள இடங்களில் இந்த பூச்சிகளின் தாக்குதல் அதிகமாக இருக்கும். நெல்லின் தண்டு பகுதியில் கூட்டமாக அமர்ந்து சாறு உறிஞ்சும் இந்த பூச்சிகளால் நெற்பயிர் முற்றிலுமாக காய்ந்து விடும். தாக்குதல் அதிகம் உள்ள வயல்களில் எரித்தது போன்ற அறிகுறிகள் ஆங்காங்கே தென்படும். தழைச்சத்து உரங்களை 3-4 முறை பிரித்து இட வேண்டும். செயற்கை பைரித்திராய்டு மற்றும் பூச்சிகளின் மறு உற்பத்தியை தூண்டும் பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்த கூடாது. 3 சத வேப்ப எண்ணெய் கரைசலை எக்டருக்கு 6 லிட்டர் / ஏக்கர் என்ற அளவில் சோப்பு கரைசலுடன் கலந்து தெளிக்க வேண்டும். பூச்சிக் கொல்லிகளான டைக்குளோர்வாஸ் 76 SC 200 மி.லி / ஏக்கர் (அ)

ஃபுப்ரோபசின் 25 SC 325 மி.லி / ஏக்கர் (அ) பிப்ரோனில் 5% SC 400 மி.லி / ஏக்கர் (அ) இமிடாகுளோபிரிட் 17.8% SL 40 மி.லி / ஏக்கர் ஒரு எக்டருக்கு தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**நோய் மேலாண்மை**

கடலோர மாவட்டங்களில் காற்றழுத்தத் தாழ்வுநிலையால் மேகமுட்டத்துடன் கூடிய வானிலையும் காற்றில் அதிக ஈரப்பதமும் 3 அல்லது 4 நாட்கள் காணப்பட்டால், நெல்பயிரில் குலைநோய் தென்பட அதிக வாய்ப்புண்டு. விவசாயிகள் உடனே 0.1 சதம் ட்ரைசைக்கிலோசோல் அல்லது கார்பண்டாசிம் 50% WP 1.5 - 3.0 கி/லி அல்லது கார்பன்டாசிம் 12% மற்றும் மேன்கோசெப் 63 % WP கலந்த மருந்தினை 5 கி/லி என்ற அளவில் நோய் தாக்கியவுடன் பயிர்களில் தெளிக்கவும். தேவைப்படின் 10 நாட்கள் இடைவெளியில் மறுமுறை தெளிக்கவும்.

மற்றும் பாக்டீரியா இலை நோயை கட்டுப்படுத்த கோசைடு 77% WP என்ற மருந்தை 8.0 கிராம் / 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும் மற்றும் தழைச்சத்தை மூன்று முறை பிரித்து இடவும்.

இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்த மான்கோசாப் (2.0 கிராம் / லிட்டர் தண்ணீருக்கு) 2 முறை நட்ட 40 மற்றும் 55 நாட்களுக்குப் பின்னர் பயிர்களில் தெளிக்கவும்.

**பருத்தி**

சாறு உறிஞ்சும் பூச்சிகளான இலைப்பேன் தருமபுரி, விழுப்புரம், தேனி மற்றும் சேலம் மாவட்டங்களிலும் தென்படுகின்றன. ஆதலால் இவற்றைக் கண்காணிக்க விவசாயிகள் மஞ்சள் ஒட்டும் பொறி 5 எண்ணிக்கை ஒரு ஏக்கருக்கு வைக்கவும் மற்றும் இவற்றைக் கட்டுப்படுத்த மீன் எண்ணெய் சோப் 1 கிலோ, 40 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு எக்டருக்கு தெளிக்கவும்.

திருநெல்வேலி மற்றும் தருமபுரி மாவட்டத்தில் பருத்தியில் சிவப்பு காய்ப்புழுவின் தாக்குதல் தென்படுகிறது. ஆதலால் விவசாயிகள் இனக்கவர்ச்சிப் பொறிகளை ஏக்கருக்கு 5 வைத்து அந்திப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கவும் மற்றும் பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும்.

**நிலக்கடலை**

விழுப்புரம், ஈரோடு, மதுரை, சிவகங்கை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் சேலம் மாவட்டங்களில் இலைச்சுருட்டுப்புழுவின் தாக்குதல் தென்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த எக்டருக்கு ஒரு விளக்குப்பொறி வைத்து அந்திப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கவும் மற்றும் சிவப்பு கம்பளிப் பூச்சியின் நடமாட்டத்தை கண்காணிக்கவும். தேவைப்படின் வேப்பங்கொட்டை சாறு 5 சதம் தெளிக்கவும்.

ஈரோடு, இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் இலைப்புள்ளிகளின் தாக்குதல்கள் தென்படுகிறது, இவற்றைக் கட்டுப்படுத்த கார்பன்டாசிம் 200 கிராம் (அ) மான்கோசாப் 400 கிராம் (அ) குளோரோதலானில் 400 கிராம் ஒரு ஏக்கருக்கு தெளிக்கவும். தேவைப்பட்டால் 15 நாட்கள் கழித்து மறுபடியும் தெளிக்கவும்.

**கரும்பு**

கோயமுத்தூர், ஈரோடு, தர்மபுரி, நாகப்பட்டினம், சிவகங்கை, விழுப்புரம், சேலம் மற்றும் திருச்சி பகுதிகளில் இடைக்கணுப்புழு தாக்குதல் பரவலாகத் தென்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த டிரைக்கோகிராமா கைலோனிஸ் முட்டை ஒட்டுண்ணியை நான்கு மாத பயிரில் தொடங்கி 15 நாட்கள் இடைவெளியில் ஏக்கருக்கு 1 சி.சி. என்றளவில் 6 முறை வெளியிடவும்.

**முந்தரி**

கடலூர் மாவட்டத்தில் முந்தரியில் கொசு ஈ தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. கொசு தாக்குதலை கட்டுப்படுத்த புரோமினோபாஸ் (0.05 சதம்) (அ) குளோர்பயிர்பாஸ் (0.05 சதம்) (அ) கார்பரில் (0.1 சதம்) தெளிக்கவும்.

**தகவல்**

இயக்குநர், பயிர் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை – 3.